# ஆண்டின் பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

சபை உரையாளர் 1:2,2:21-23, கொலோ. 3:1-5,9-11, லூக்கா: 12:13-21

## திருப்பலி முன்னுரை:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தலைமுறைதோறும் நமது புகலிடமாய் இருக்கின்ற நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று நாம் திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்..

“எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது”.என்பது இன்று நமக்குத் தரப்படும் மிக முக்கியமான செய்தியாகும். இச் செய்தி இவ்வுலகில் நமது நிலையாமை பற்றிய உண்மையைப் புரிந்து கொண்டு வாழ அழைக்கின்றது. உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச் செல்கிறார். என்னும் வார்த்தையும், இவ்வுலகு சாந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். என்னும் பவுலடியாரின் கூற்றும் எதுவும் நிலையற்றவை ஆனால் இறையன்பு மாத்திரமே நிலையானது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஆகவே உலகப்போக்கிலான பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிட்டு. பொய்யை விலக்கி, பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்து புது வாழ்வு வாழ அருள்வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1.ஞானமிகு உள்ளத்தை வளங்கிடும் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும், உமது சாயலுக்கேற்பத் தங்களைப் புதுப்பித்துக்கொண்டு. இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றிய ஆர்வமுடையவர்களாகவும், அதன்மூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிடும் மனப்பக்குவத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. தலைமுறைதோறும் எமது புகலிடமாய் இருக்கின்ற தந்தையே இறைவா!**

நாம் உலகப்போக்கிலான பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிட்டு. பொய்யை விலக்கி, பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்து புது வாழ்வு வாழ உதவிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இம்மண்ணிலே புலம் பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும் உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. உமது பேரன்பால் எங்களுக்கு நிறைவளிக்கும் தந்தையே இறைவா!**

பல்வேறு விதமான நோய்களாலும் தாக்கப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருப்போர் அனைவரையும் உமது கருணையால் குணப்படுத்தி, உமது பேரன்பால் அவர்களை நிறைவு படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

எமது பிள்ளைகளை உமக்குக் காணிக்கையாக்குகின்றோம். அவர்கள் உமது வார்த்தையை ஆர்வமுடன் கேட்டு உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.